கரந்தெனிய பிரதேச சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கரந்தெனிய பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவு சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கரந்தெனிய பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, இந்த அறிக்கையில் பந்தி 1.6 இல் 1.6.1 (ஊ) பரிந்துரைகள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ரூபா 315,000 தொகை பெறுமதியான 03 சொத்து விடயங்களின் பெறுமதி மீண்டுவரும் செலவுகள் என காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என.	செலவுகளை சரியான இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	ரூபா 919,900 தொகை பெறுமதியான உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தாமல் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என.	நிலையான சொத்துக்களை வகைப்படுத்தலை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	சபைக்குச் சொந்தமான சோலார் முறைமையின் ரூபா 361,075 தொகை கிரயத்தை உடைய மின்சார துணைக் கருவிகளின் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை.	2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என.	குறிப்பிட்ட மின்சார துணைக் கருவிகளின் பெறுமதி இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களில் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(ஈ)	சபைக்குச் சொந்தமான 23 காணிகள் மற்றும் 20 கட்டிடங்களுக்கான பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.	பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் கணக்கீடு செய்யப்படும்.	சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியப் பங்களிப்பு நிதிக்கு செலுத்த வேண்டிய ரூபா 12.76 மில்லியனிற்கான மீதிக்காக கடனகொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.	2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என.	செலுத்த வேண்டியவைகளுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.
(ஊ)	முன்னைய ஆண்டு தொடர்பாக பெற வேண்டிய ரூபா 1.11 மில்லியன் நிலையான வைப்பு வட்டி திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென காட்டப்பட்டிருந்தமையால் அந்தப் பெறுமதியினால் மீளாய்வாண்டிற்கான மிகை கூடுதலாகவும் மற்றும் திரண்ட நிதியத்தில் குறைவாகவும் காட்டப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 185,756 தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என.	சரியாக கணக்ககீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	2019 ஆண்டின் போது டெண்டர் பிணை வைப்பு மற்றும் பாதுகாப்புப் பிணை தொகை முறையே ரூபா 495,500 தொகை மற்றும் ரூபா 220,600 தொகையினை தீர்த்தல் காசுக் கணக்கில் மாத்திரம் பதிவு செய்தல், மீளாய்வாண்டின் போது சரி செய்யும் போது பிழையான முறையில் பிணைக் கணக்கு வரவு வைத்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் கணக்கில் செலவு வைத்திருந்தமையால் மீளாய்வாண்டின் இலாபம் அந்தப் பெறுமதியினால் அதிகரித்திருந்தது.	2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என.	சரியாக கணக்ககீடு செய்தல் மேற்கொள்ள வேண்டும்.
(ஏ)	2022 ஆண்டின் போது நிர்மாண வேலைகளுக்காக 10 சதவீத தடுத்து வைத்தல் பணக் கணக்கு ரூபா 192,466 தொகை தீர்த்தல் காசுக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது சரி செய்யும் போது பிழையான முறையில் மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு நிர்மாண வேலை 10 சதவீத வரிக் கணக்கில் செலவு வைத்தமையால் மீளாய்வாண்டின் இலாபம் அந்த பெறுமதியினால் குறைவடைந்திருந்தது.	2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என.	சரியாக கணக்ககீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 302,925 தொகைக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.	எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	மீதிகளின் வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்ய வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
கூட்டுத்தொகை ரூபா 13,116,007 தொகைக்கான 04 கணக்கு விடயங்களுக்காக அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியவில்லை.	நீண்ட காலமாக காணப்படுகின்ற மீதிகளாகும் எனவும், அங்கீகாரம் கிடைத்த பின்னர் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். இந்த மீதிகளுக்குரிய கோப்புக்கள் வெள்ள நிலைமையின் காரணமாக அழிவடைந்துள்ளன என.	உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1)	சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முன்னேற்றமான பிரதேசங்கள் என இனங்கண்டு அங்கு அமைந்துள்ள அசையாச் சொத்துக்களுக்காக வீதவரி அறவீடு செய்தல் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவிலலை.	பெறுமதி மதிப்பீட்டின் படி 2025 ஆண்டில் வரி அறவடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வரிகள் விதிக்கப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக கோவை			
	(i) நி.பி. 571	02 வருடங்களை மிகையான ரூபா 602,087 தொகை தொடர்பாக 16 மீதிகள் தொடர்பாக நிதிப்	நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

		பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.		
(ii)	நி.பி. 177(1)	களத்தில் சேகரிக்கப்படுகின்ற பணம் அத் தினத்தில் அல்லது அதற்கு அடுத்த நாள் அனுப்பப்பட வேண்டிய போதிலும், சபையின் வருமானப் பிரதேசத்தினால் சேகரிக்கப்பட்ட ரூபா 200,450 தொகையொன்று 47 நாள் தாமதத்தின் பின்னர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.	களத்தில் சேகரிக்கும் பணம் அந்த நாளில் அல்லது அடுத்த நாளில் அட்டவணைகளுடன் விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்து பணம் ஒப்படைக்கப்பட்டிருந்தது என.	இவ்வாறான தாமதங்கள் ஏற்படாமல் நடவடிக்கை எடுக்கும் படி உத்தியோகத்தரை அறிவுறுத்துவதற்கும் அதன்படி, செயற்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(இ)	2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 இலக்கம் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை	உச்சமட்ட கால வரையறை 05 வருடங்கள் ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காமல் சபையின் 05 உத்தியோகத்தர்களுக்கு 06 வருடங்களுக்கும் 08 இற்கும் இடைப்பட்ட காலம் சபை அலுவலகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.	கிடைக்கப்படும் இடமாற்றக் கட்டளைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	இடமாற்றக் கொள்கையின் படி மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் பொருத்தமானவாறு உத்தியோகத்தர்களின் இடமாற்றம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 13,497,532 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,020,062 தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

வருமான மூலம்	2024 மதிப்பீட்டு வருமானம்	2024 சிட்டையிடப்பட்ட வருமானம்	2024 சேகரிக்கப்பட்ட வருமானம்	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	2023 மதிப்பீட்டு வருமானம்	2023 சிட்டையிடப்பட்ட வருமானம்	2023 சேகரிக்கப்பட்ட வருமானம்	2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	4,060,657	5,118,155	5,876,081	4,863,067	4,168,798	4,741,920	5,108,424	5,620,998
வாடகை	7,473,420	9,752,835	7,115,338	6,943,901	8,910,350	6,659,850	9,887,267	4,306,404
அனுமதிப் பத்திரக் கட்டணம்	531,200	1,519,635	1,540,635	128,350	450,100	422,597	398,597	149,350
ஏனைய வருமானங்கள்	5,725,000	12,873,134	12,129,506	791,820	11,883,000	8,463,326	8,460,326	48,192
	17,790,277	29,263,759	26,661,560	12,727,138	25,412,248	20,287,693	23,854,614	10,124,944

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
வீதவரியும் வரியும்		
(i) மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வீதவரி மற்றும் வரி வருமானம் ரூபா 5.62 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் உட்பட வருடத்தில் அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 10.74 மில்லியன் தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 5.88 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால், ரூபா 4.86 மில்லியனிற்கான நிலுவையொன்று காணப்பட்டது.	வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக நிச்சயிக்கப்பட்ட கால சட்டகத்துடனான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ii) மீளாய்வாண்டின் போது 105 வீதவரி அலகுகளில் இருந்து எதுவித வரித் தொகையும் அறவீடு செய்திருக்கவில்லை.	வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(iii) 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 இன் பிரகாரம் வீதவரி ஆதனங்களுக்காக 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 2008 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 16 வருடங்கள் பழமையான பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியின் மீது வரி அறவீடு செய்வதன் மூலம் சபைக்கு கிடைக்க வேண்டிய பாரிய வருமானம் ஒன்றை இழந்திருந்தது.	2025 ஆண்டு முதல் வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	தற்போதைய பெறுமதிக்கு ஆதனச் சட்டத்தின் பிரகாரம் பெறுமதி மதிப்பீடு செய்து வருமானம் சேகரிக்க வேண்டும்.

(ஆ) வாடகை

(i) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு வாடகை வருமானம் ரூபா 4.31 மில்லியனான காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிலாகிய ரூபா 9.75 மில்லியன் தொகை உட்பட ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 14.1 மில்லியன் எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 7.12 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 6.94 மில்லியன் தொகை வரை அதிகரித்திருந்தது.	நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக மற்றும் தொடர்ச்சியாக காணப்படும் செலுத்தப்படாத மீதிகளுக்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக நிச்சயிக்கப்பட்ட கால சட்டகத்துனான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ii) பிரதேச சபைக்கு சொந்தமான 241 கடையறைகளில் 83 தொடர்பாக ரூபா 3.46 மில்லியன் தொகை நிலுவையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிலுவை மீதிகளை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	குறிப்பிட்ட நிலுவை தொகையை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(iii) தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி	உடன்படிக்கைகள் நாளதுவரையாக்க நடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என.	சுற்றறிக்கை அறிவுரைகளின் படி உடன்படிக்கைகளுக்கு அணுகி அனைத்து

	16 இன் படி முழுமையாக ஒரே தடவையில் பெறும் பணம் செலுத்தி முடிந்த பின்னர் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், சபைக்குச சொந்தமான 03 கடையறைகளுக்காக அவ்வாறு உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. கடையறைகளுக்குரிய அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 72 கடையறைகளுக்கான உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.		உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒருமுறை தான் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும்.
(iv)	05 வருடங்களுக்கு ஒருமுறை புதிய பெறுமதி மதிப்பீடொன்றின் மூலம் கடையறை வாடகை திருத்தப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 94 கடையறைகள் 2015 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவீடு செய்யப்பட்டமையால், சபைக்குக் கிடைக்க வேண்டிய வாடகை வருமானத்தை இழந்திருந்தது.	பெறுமதி மதிப்பீட்டை திருத்தம் மேற்கொள்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என.	கடையறைகளின் தற்போதைய பெறுமதிக்கு பெறுமதி மதிப்பீடு செய்து விரைவாக வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	**அனுமதிப்பத்திரக் கட்டணம்**		
	மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 128,350 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் நிலுவை ஒன்று காணப்பட்டது.	எதிர் காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் சேகரிக்கப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்ட கால சட்டகமொன்றுடன் வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி நிலுவை வருமானம் சேகரிக்கப்பட வேண்டும்.
(ஈ)	**ஏனைய வருமானங்கள்**		
(i)	மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 48,192 தொகைக்கான ஏனைய நிலுவை வருமானங்கள் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 791,820 தொகை வரை அதிகரித்திருந்தது.	நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	நிலுவை வருமானம் சேகரிக்கப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்ட கால சட்டகமொன்றுடன் வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி நிலுவை வருமானம் சேகரிக்கப்பட வேண்டும்.
(ii)	2023 நவம்பர் 10 திகதய 2358 இலக்கம் கொண்ட வர்த்தானி அறிவித்தலின் படி பீ.டீ. சமரவீர விளையாட்டுத் திடலை	கௌரவ ஆளுனரின் கட்டளையின் படி விடுவிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.	குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க களியாட்ட வரி மற்றும் விளையாட்டுத் திடல்

வாடகைக்கு கொடுத்தல் மூலம் பழைய மாணவர் சங்கமொன்றிலிருந்து பெற வேண்டிய களியாட்ட வரி மற்றும் விளையாட்டுத் திடல் கட்டணமாகிய ரூபா 111,000 தொகை அறவீடு செய்திருக்கவில்லை.		கட்டணம் குறிப்பிட்டவாறு அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுப்பனவுகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மாவட்ட அங்கீகரிக்கப்பட்ட விலைக் குழுவின் கூறுவிலைகளின் படி ஹியும் குழாய்கள் வ/ப பத்தேகம (மேற்கு) பிரதேச அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் கூறுவிலைகளின் படி கொள்வனவு செய்ய வேண்டியிருந்த போதிலும், அதற்கு இணக்கமின்றி தரம் தொடர்பாக கவனம் செலுத்தாமல், குறைந்த கூறுவிலைகள் சமர்ப்பித்திருந்த வேறு நிறுவனம் ஒன்றிலிருந்து ரூபா 448,000 தொகை பெறுமதியான 22 ஹியும் குழாய்கள் கொள்வனவு செய்திருந்ததுடன், சபையினால் 09 ஹியும் குழாய்களுக்காக ரூபா 86,200 தொகை மிகையாக செலுத்தியிருந்தது.	பிரதேச அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் கூறுவிலைகளுக்கு மேற்கொள்ளப்படுகின்றது என.	மாவட்ட அங்கீகரிக்கப்பட்ட விலைக் குழுவின் கூறுவிலைகளின் படி கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன், மிகையாக செலுத்திய தொகையை பொறுப்பான உத்தியோகத்தரிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் போது களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த மின்சார பண்டங்களின் எண்ணிக்கை மற்றும் வீதி விளக்கு பிரிவின் மூலம் பொருத்தப்பட்ட எண்ணிக்கைகளுக்கிடையே ரூபா 219,959 தொகை கிரயத்தையுடைய 12 விடயங்களுக்குரிய 563 அலகுகளுக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.	கூட்டுப் பதிவேட்டை இணக்கஞ் செய்து இந்த வித்தியாசத்தை சரி செய்யப்படும் என.	இணக்கமொன்று மேற்கொண்டு வித்தியாசத்திற்கான காரணங்களை கண்டறிய வேண்டியதுடன், இது தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைப்படுத்த வேண்டும்.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2022 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை 54 கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள்	சபையின் திட்டக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது	இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத நிர்மாண வேலைகள்

அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 08 நிறுவனங்கள் மாத்திரம் இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொண்டிருந்தது. 1978 இன் 45 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 10(6) இன் படி கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் 02 வருடங்கள் வரை மாத்திரம் நீடிக்க முடியுமாக இருந்த போதிலும், சபையினால் அந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பின்னர் 54 கட்டிடங்களை மேற்பார்வை செய்ததற்கான தகவல்கள் காணப்படவில்லை.	எனவும் மற்றும் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் அல்ல எனவும்.	தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

3.4 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு சபையின் ஆயுர்வேத மருத்துவத உத்தியோகத்தர், நூலகர், வருமானப் பரிசோதகர்கள், ஆயுர்வேத மருந்துக் கலவையாளர்கள் உட்பட பல பதவிகளில் 19 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், உத்தியோகத்தர்கள் 04 பேருக்கான மிகையும் காணப்பட்டது.	பதவியணி வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளூராட்சி திணைக்களத்தை அறிவுறுத்தப்பட்டுள்ளது என.	சபையின் பணிப்பொறுப்பு மற்றும் விடயப் பரப்பின் படி பதவியணி மீளாய்வு மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 1.57 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் கூட்டுத்தொகை ரூபா 396,981 தொகைக்கான மீதியொன்று 03 வருடங்களுக்கும் 36 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற கடன் மீதிகளாகும்.	அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை மீதியை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள ரூபா 1,961.6 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 40 வேலைத்திட்டங்கள் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	மீதியான அபிவிருத்திச் செயற்திட்டங்கள் எதிர் காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சபைக்குச் சொந்தமான வளங்கல் மற்றும் நிதியங்களின் வழங்குதல்களை கவனம் செலுத்தி செயல் நடவடிக்கைத் திட்டங்கள் அறிவியல் ரீதியாக தயாரிக்கப்பட்டு செயற்படு நிலைமைக்கு ஆக்க வேண்டும்.